# எதற்கெடுத்தாலும் தி.மு.க. - தி.மு.க. எனக் கதறும் முதலமைச்சர் விஜய்!

## தாராபுரம் பிரச்சாரக் கூட்டத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு...

முதல் பக்கத் தொடர்ச்சி!

சென்று, அவர்களுக்கே திரும்பவும் வாய்ப்புக் கொடுத்து மீண்டும் உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள் என்றால், தாராபுரம் மக்கள், குறிப்பாக நத்தம்பாளையம் மக்கள் நீங்கள் மீண்டும் ஏமாந்து, அ.தி.மு.கவில் போட்டியிட்ட அந்த வேட்பாளருக்கு வாக்களிப்பீர்கள் என்று நம்பி, உங்களிடம் வந்திருக்கிறார். அந்தத் தவறை மீண்டும் செய்வீர்களா?

நீங்கள் இப்போது இருக்கக்கூடிய ஆளுங்கட்சி வேட்பாளர், அவர்களுக்குத்தான் ஏற்கனவே நீங்கள் வாக்களித்தீர்கள். அவருக்கு வாக்களித்தீர்கள் என்றால், அவர்கள் சட்டமன்றத்தில் உங்களுக்காகக் குரல் கொடுப்பார்கள் என்று நினைக்கிறீர்களா?

நீங்கள் எல்லாம் இப்போது `பிக்பாஸ்' பார்க்க ஆரம்பித்துவிட்டீர்களா? இந்த பிக்பாஸுக்கு முன்னால் ஒரு `பிக்பாஸ்' நடந்தது, தெரியுமா உங்களுக்கு? 40 நாள்கள் சட்டமன்றம் நடந்தது. நாங்களெல்லாம் எவ்வளவு கஷ்டப்பட்டோம் தெரியுமா?

**முதல்வர் விஜய் மக்கள் பிரச்சினைகளை பேசியதாகச் சரித்திரமே கிடையாது!**

சட்டமன்றத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிப் பிரச்சனையைப் பற்றிப் பேசுவார்கள். எங்கள் தொகுதியில் சாலை வசதி இல்லை, குடிநீர் வரவில்லை, சாக்கடைப் பிரச்சினை, ஒரு சமுதாய நலக்கூடம் கட்டிக் கொடுங்கள், ஒரு விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுங்கள், ஒரு பள்ளிக்கூடம் கட்டிக் கொடுங்கள். இதுதான் கேட்பார்கள். குறை இருந்தால் சொல்வார்கள், எங்கள் தொகுதியில் இந்தப் பிரச்சினை இருக்கிறது, இதைத் தீர்த்துக்கொடுங்கள் என்று சொல்வார்கள்.

நாங்கள் அதையெல்லாம் பேசுகிறோம். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் மக்கள் பிரச்சினையைப் பேசுகிறோம், கேள்வி கேட்கிறோம். இதற்கு ஆளுங்கட்சி, முக்கியமாக முதலமைச்சர் வாயைத் திறந்து பேசியதாகச் சரித்திரமே கிடையாது. பிடித்து வைத்த பிள்ளையார் என்பார்களே, அப்படித்தான் உட்கார்ந்து கொண்டிருப்பார். சட்டப்பேரவையில் கேள்வி கேட்டால், துறை சார்ந்த அமைச்சர்கள் பதில் சொல்வார்கள். முதலமைச்சர் பதில் சொல்வார், அந்தத் துறையின் அமைச்சர் எழுந்து நின்று பதில் சொல்வார். அதன் பிறகு நாங்கள் திரும்பவும் ஏதாவது கேள்வி கேட்கலாம், எதிர் கேள்வி கேட்கலாம், துணைக் கேள்வி கேட்கலாம். பாட்டுப் பாடினால் நாங்கள் என்ன செய்வது? இதற்காக நாங்களெல்லாம் பாட்டு கிளாசுக்கா போக முடியும்?

நான் சட்டமன்றத்திலேயே சொன்னேன், `பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது. நாங்கள் சட்டமன்றத்திற்குத்தான் வந்து இருக்கிறோமா? `சூப்பர் சிங்கர்' நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறோமா? எல்லாரும் பாட்டுப் பாடுகிறீர்கள். அமைச்சர் பாட்டுப் பாடுகிறார், அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் பாட்டுப் பாடுகிறார்கள், பேரவைத் தலைவர் பாட்டுப் பாடுகிறார். முதலமைச்சர், பேரவைத் தலைவர் `ஆக்ஷன்' சொன்ன உடனே நடிக்கிறார். படப்பிடிப்புத் தளத்திற்குப் போன மாதிரியே இருக்கிறது. சரி, நான் ஒன்று கேட்கிறேன்.

**தேய்ந்து போன டேப் ரிக்கார்டர்!**

நேற்று முதலமைச்சர் தேர்தல் பிரச்சாரத்திற்காக மதுராந்தகத்தில் பேசினார், நடித்தார், கத்தினார், காட்டு கத்தல். யாராவது பார்த்தீர்களா? பார்த்திருப்பீர்கள். சிலர் பார்த்திருப்பீர்கள், சிலர் பார்க்காமல் விட்டிருப்பீர்கள். பார்க்காமல் விட்டவர்கள் கவலைப்படாதீர்கள். மீண்டும் நாளை மறுநாள் அதைத்தான் பேசுவார். ஏனென்றால், கடந்த இரண்டு வருடங்களாக அதை மட்டுமேதான் பேசிக் கொண்டு இருக்கிறார்.

இந்த தேய்ந்து போன டேப் ரிக்கார்டர் என்று சொல்வார்களல்லவா, போட்டால் பேசியதையே பேசிக் கொண்டு இருக்கும், பாடியதையே பாடிக் கொண்டு இருக்கும். நேற்று மட்டும் மதுராந்தகத்தில், முதலமைச்சர் 30 நிமிடங்கள் பேசி இருக்கிறார். அந்த 30 நிமிடங்களில் 32 முறை 'தி.மு.க', 'தி.மு.க', 'தி.மு.க', 'தி.மு.க' என்று பேசியிருக்கிறார். நாங்கள் கூட அவ்வளவு பேசமாட்டோம். தி.மு.க பற்றி அவ்வளவு பேச மாட்டோம். அந்த அளவிற்கு நம் மீது அவ்வளவு பிரியம். பயம், வேறு எதுவுமே தெரியாது.

இங்கு இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ன தெரியுமா சொல்கிறார்? எழுந்து நின்று ஓர் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர் எழுந்து நின்று பேசுகிறார், `பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களை எங்களால் எல்லாம் பார்க்க முடியவில்லை. எதிரே அமர்ந்திருப்பவர்கள் எல்லாம் பார்க்கிறார்கள். நாங்களெல்லாம் சட்டப்பேரவைக்கு வருவதே முதலமைச்சரைப் பார்க்க வேண்டும் என்றுதான். அதனால், அவர் சிரிப்பதைப் பார்க்க வேண்டும், அவருடைய முகத்தைப் பார்க்க வேண்டும். அதனால் நாங்கள் பார்க்கும் வகையில், எங்கள் அனைவருக்கும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி கொடுங்கள்' என்று சொன்னார்.

நான் எழுந்து நின்று சொன்னேன், `தயவு செய்து ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வந்து எங்கள் பக்கத்தில் அமர்ந்து கொள்ளுங்கள். நாங்கள் எழுந்து போய்விடுகிறோம். எங்களால் இங்கு அமர்ந்து அவருடைய முகத்தையெல்லாம் பார்க்க முடியவில்லை' என்று சொன்னோம். இதுதான் சட்டமன்றத்தில் நடந்துகொண்டு இருக்கிறது.

ஒரு சட்டமன்ற உறுப்பினர் எழுந்து நின்று பேசுகிறார், என்ன தெரியுமா சொல்கிறார்? `பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சருக்கு நன்றி.' 'ஏன்? எதற்காக நன்றி?' என்றேன்.



`இல்லை, நான் வேலை இல்லாமல் இருந்தேன், எனக்கு வேலை கொடுத்துவிட்டார். எனக்கு வீடு இல்லை, வீடும் ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டார். எனக்கு கார் இல்லை, காரும் ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டார். எனக்குச் சமீபத்தில் காதல் தோல்வி ஏற்பட்டுவிட்டது' என்று ஆரம்பிதார். நான் அப்படியே ஆடிபோய் விட்டேன். என்னடா இது, இந்த முதலமைச்சர் இந்தத் திட்டமெல்லாம் கூட வைத்திருக்கிறாரா என்று யோசிக்கிறேன்.

**அடுத்த நிமிடம் செய்கிறேன் என்றார், செய்தாரா?**

இதுதான் தமிழ்நாட்டு மக்கள் எதிர்பார்த்த மாற்றமா? மிகப்பெரிய ஏமாற்றம். இவர் என்னென்ன சொல்லி ஆட்சிக்கு வந்தார் என்று உங்களுக்குத் தெரியும். ஏதாவது ஒன்று செய்தாரா?

இவர் என்னென்ன வாக்குறுதி கொடுத்தார்கள் என்று கொஞ்சம் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தேர்தல் பிரச்சாரத்தில் என்ன தெரியுமா சொன்னார்? 'ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம், அடுத்த நிமிடம் செய்கிறேன்' என்று சொன்னாரா இல்லையா? என்னென்ன முக்கியமான வாக்குறுதி கொடுத்தார்?

மகளிர் உரிமைத்தொகை நம்முடைய தலைவர் 1,000 ரூபாய் மாதம் தோறும் கொடுத்தாரா இல்லையா சரியாக? இவர் என்ன வாக்குறுதி கொடுத்தார்? 2,500 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பேன் என்று சொன்னார், கொடுத்தாரா? ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் செய்கிறேன் என்றார், செய்தாரா? செய்யவில்லை.

அதன் பிறகு வருடத்திற்கு ஆறு கேஸ் சிலிண்டர் கொடுக்கப் போகிறேன் ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் என்றார், கொடுத்தாரா? இப்போதுதான் அறிவித்திருக்கிறார், அதுவும் என்ன? மூன்று கேஸ் சிலிண்டர், அதுவும் எப்போது? இப்போது கிடையாது, அடுத்த வருடம். அடுத்த வருடம் கொடுப்பாராம்.

அதன் பிறகு இன்னொன்று, வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதம் தோறும் 4,500 ரூபாய் ஊக்கத்தொகை ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் கொடுப்பேன் என்றார், கொடுத்தாரா? அதைப் பற்றிய பேச்சே கிடையாது.

**நம் தலைவர் முதல்வராக இருந்தால் இந்நேரம் கொடுத்திருப்பார்!**

இன்னொரு முக்கியமான அறிவிப்புக் கொடுத்தார், என்ன? விவசாயிகளுக்கு முழுப் பயிர்க்கடன் தள்ளுபடி செய்கிறேன் என்று சொன்னாரா இல்லையா? ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் செய்கிறேன் என்றார், செய்தாரா? அதைச் செய்யுங்கள், அதை முதலில் செய்யுங்கள், இல்லையென்றால் தண்ணீரைத் திறந்து விடுங்கள் என்றேன், அதற்கு என் மீது வழக்குப் போட்டார்.

ஆனால், நம் தலைவர் வாக்குறுதி கொடுத்தார், ஆட்சிக்கு வந்த உடனே மகளிர் உரிமைத்தொகையை 2,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பேன் என்று சொன்னார். செய்திருப்பாரா, மாட்டாரா? நம் தலைவர் நிச்சயம் செய்திருப்பார். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 8,000 ரூபாய் மதிப்புள்ள கூப்பன் கொடுக்கிறேன் என்றார், சொன்னார். கொடுத்திருப்பாரா, மாட்டாரா? இந்நேரம் கொடுத்திருப்பார்.

ஆனால் இந்த ஆட்சியின் சாதனை என்ன?

இவர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் முதலமைச்சர் என்ன சொன்னார்? இரண்டே பேருக்குத்தான் போட்டி என்றார். இப்போது வரைக்கும் அதைத்தான் சொல்லிக் கொண்டு இருக்கிறார். நேற்றும் அதேதான், மீண்டும் அதேதான். ஆனால் அதற்குத்தான் நம் தலைவர் சொன்னார், 'இந்த முதலமைச்சரின் பாணியிலேயே நான் சொல்கிறேன், ஆமாம், இப்போது இரண்டே இரண்டு பேருக்குத்தான் போட்டி. ஒன்று மின்வெட்டு, இன்னொன்று அரிவாள் வெட்டு' என்றார்.

எங்குப் பார்த்தாலும் மின்வெட்டு. முதலமைச்சர் தொகுதியிலேயே மின்சாரம் கிடையாது. அமைச்சர்கள் பங்கேற்கிற நிகழ்ச்சியில் மின்சாரம் கிடையாது. நேற்று ஓர் அமைச்சர் பேசும்போது மின்சாரம் போய்விட்டது.

இப்படி ஒரு மோசமான ஆட்சி. எவ்வளவு தைரியம் இருந்தால் அ.தி.மு.க அவர்களுடைய சின்னத்தில் நின்று, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களுடைய உழைப்பில் வெற்றிபெற்று, பதவி ஏற்ற பத்தே நாளில் கட்சி மாறி, இன்று மீண்டும் உங்களிடம் வந்து ஒப்படைத்திருக்கிறார்கள் என்றால், நீங்கள் சென்ற முறை செய்த தவறைச் செய்துவிடுவீர்கள் என்கிற அந்த எண்ணம்தான்.

**பாட்டுத்தான் பாடுவார்கள் அல்லது ரீல்ஸ் வெளியிடுவார்கள்!**

மீண்டும் நீங்கள் அந்த அம்மாவை வெற்றி பெற வைத்தீர்கள் என்றால், யார்? `பெட்டிபாமா'வை வெற்றிபெற வைத்தீர்கள் என்றால், சட்டமன்றத்தில் போய் வெறும் பாட்டுத்தான் பாடுவார்கள். இந்த முதலமைச்சரைப் புகழ்ந்து வெறும் பாட்டுத்தான் பாடுவார்கள் அல்லது ரீல்ஸ் வெளியிடுவார்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அவர்கள் நிற்கிறார்கள். அவர்களுக்கு வாக்களித்தீர்கள் என்றால் அவர்கள் மீண்டும் பெட்டி வாங்கிக்கொண்டு கட்சி மாறிவிடுவார்கள். அதனால், நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், மீண்டும் இந்தத் தவறை, கடந்த தேர்தலில் செய்த தவறைத் தயவுசெய்து செய்துவிடாதீர்கள்.

வருகின்ற 6ஆம் தேதி தேர்தல். வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்குப்பெட்டியில் நம் வெற்றி வேட்பாளர் சகோதரி சுகன்யாவின் பெயர் அந்த வாக்குப்பெட்டியில் மூன்றாவது இடத்தில் இருக்கும். அவர்களுக்கு வாக்களியுங்கள். வாக்கு எண்ணிக்கை 9ஆம் தேதி, வாக்கு எண்ணிக்கையின் போது அவர்களுடைய பெயர் முதலிடத்திற்கு வர வேண்டும், வெற்றி பெற்றார்கள், தாராபுரம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகச் சகோதரி சுகன்யா அவர்கள் தேர்வு பெற்று இருக்கிறார்கள் என்ற அந்த வெற்றிச் செய்திதான் வர வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தாருங்கள்!**

நான் உங்களிடம் சொல்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். இன்னும் 9 நாள்கள்தான் இருக்கின்றன. நீங்கள் அத்தனை பேரும் முடிவு செய்துவிட்டீர்கள், இந்த இடைத்தேர்தலில், இந்த ஆளுங்கட்சிக்கு ஒரு சரியான பாடத்தைப் புகட்ட வேண்டும் என்ற முடிவை எடுத்திருக்கிறீர்கள். அடுத்த ஒன்பது நாள்கள் இந்தப் பிரச்சாரத்தை நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீடாகச் சென்று, ஒவ்வொரு வாக்காளராகச் சந்தித்து, உங்கள் குடும்பத்தில் இருப்பவர்களிடம், உங்கள் நண்பர்களிடம் இந்தப் பிரச்சாரத்தைக் கொண்டு சென்று சேர்த்திடுங்கள்.

ஏன் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும், ஏன் சகோதரி சுகன்யாவை வெற்றி பெற வைக்க வேண்டும், ஏன் இந்தச் சட்டமன்ற உறுப்பினராக உங்களுடைய பிரதிநிதியாக ஏன் சகோதரி சுகன்யாவைச் சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற இந்தப் பிரச்சாரத்தை நீங்கள் செய்து, சகோதரி சுகன்யா அவர்களை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்து நீங்கள் அனுப்ப வேண்டும், என்று உங்களை எல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகப் பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன், உதயசூரியன் சின்னத்தில் சகோதரி சுகன்யா அவர்களுக்கு வாக்களியுங்கள், மிகப்பெரிய வெற்றியைத் தேடித்தாருங்கள் என்று கூறிக்கொண்டு, இந்தச் சிறப்பான வரவேற்பு அளித்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்!**

கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழகத் துணைப் பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், வெள்ளக்கோயில் சாமிநாதன் அவர்களுக்கும், முன்னாள் அமைச்சர் முத்துசாமி, செந்தில் பாலாஜி, மாவட்டக் கழகச் செயலாளர் பத்மநாபன், நல்லசிவம், நாடாளுமன்ற உறுப்பினர்ரும் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளருமான பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் சீனிவாசன், ஜெயக்குமார், மாவட்டக் கழகச் செயலாளர் பழனியப்பன், முன்னாள் அமைச்சர் சகோதரி கயல்விழி செல்வராஜ், மாநில மாணவர் அணிச் செயலாளர் சகோதரி வீரமணி, மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் சகோதரர் முத்துக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தனசேகர், கருணாகரன், பொதுக்குழு உறுப்பினர் சிவக்குமார், ஒன்றியச் செயலாளர்கள் பழனிச்சாமி, துரை தமிழரசு, கே.கே.துரைசாமி, சந்திரசேகர், நகரக் கழகச் செயலாளர் முருகானந்தம், இளைஞர் அணி நிர்வாகிகள் ரகு, ஆனந்தகுமார், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் சத்யா பழனிகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சகோதரர் யுவராஜ், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கூட்டணிக் கட்சிகளான திராவிடர் கழகம், தேசிய முற்போக்கு திராவிட கழகம், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, மனித ஜனநாயக கட்சி, எஸ்.டி.பி.ஐ, ஆதித்தமிழர் பேரவை, தமிழப் புலிகள், திராவிடர் இயக்கம் தமிழர் பேரவை, திராவிடர் தமிழர் கட்சி, ஆதித்தமிழர் ஜனநாயகப் பேரவை, சிறுபான்மையினர் பிரிவு பாதிரியார்கள் கூட்டமைப்பு உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

---

**சந்தி சிரிக்கும் சட்டம் — ஒழுங்கு!**

# செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

## (25.09.2026)

**வண்டலூர் அருகே பயங்கரம் - 10 ஆம் வகுப்பு மாணவி பாலியல் வன்கொடுமை!**



செங்கல்பட்டு மாவட்டம் - வண்டலூர் அருகே கண்டிகை அரசுப் பள்ளியில் 10ஆம் வகுப்பு மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை. 4 பேர் கொண்ட கும்பல், 10ஆம் வகுப்பு மாணவியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த சம்பவத்தால் பெரும் அதிர்ச்சி. பட்டப்பகலில் பள்ளியின் சுற்றுச்சுவரைத் தாண்டி உள்ளே குதித்த 4 பேர் கொண்ட கும்பல், கழிவறைக்குச்சென்ற மாணவியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். கழிவறைக்குச்சென்ற மாணவியை குண்டுக்கட்டாக ஏரிக்கரைக்கு தூக்கிச்சென்று கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த கொடூரம். மயங்கிய நிலையில் கிடந்த மாணவியை மீட்டு மருத்துவமனையில் சிகிச்சை. த.வெ.க. ஆட்சியில் கேள்விக் குறியாகும் பள்ளி மாணவிகளின் பாதுகாப்பு. த.வெ.க. ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு முற்றிலும் சீரழிந்து குற்றச்சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பள்ளி வளாகத்திற்குள்ளும் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை என பெற்றோர் வேதனை.

**மூடிமறைக்க முயற்சித்த போலீஸ்!**

விஜய்யின் இடைத்தேர்தல் பிரச்சாரத்திற்காக மாணவிக்கு நிகழ்ந்த கொடூரத்தை மூடி மறைக்க முயற்சி. அரசுப் பள்ளியில் இப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என காவல்துறை சார்பில் அறிக்கை வெளியிட்டு, பாலியல் வன்கொடுமையை மூடிமறைக்க முயற்சி. பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் காவல்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதாகக் குற்றச்சாட்டு. பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்திடமிருந்து மொபைல் போன் உள்ளிட்டவற்றைப் பறிமுதல் செய்து மிரட்டும் தொனியில் பேசியுள்ளது காவல்துறை. மதுராந்தகம் இடைத்தேர்தல் பிரச்சாரத்துக்காக முதலமைச்சர் விஜய் வருகிறார் என்று சொல்லி, இந்தச் சம்பவத்தை காவல்துறையும் அதிகாரிகளும் மூடி மறைக்க முயற்சி. பாலியல் வன்கொடுமைச் சம்பவத்தை பாம்புக்கடி என்று மடைமாற்ற முயற்சித்துள்ளது காவல்துறை. குற்றவாளிகளைப் பிடிக்க வக்கின்றி பாதிக்கப்பட்ட பெற்றோரின் செல்போன்களை கைப்பற்றியுள்ளது காவல்துறை. பாலியல் வன்கொடுமைச் சம்பவம் குறித்து பொது வெளியில் பேசக்கூடாது என்று பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோரை மிரட்டியுள்ளது த.வெ.க. போலீஸ். மாணவி பாலியல் வன்கொடுமை மற்றும் போராட்டம் தொடர்பான செய்தியை சேகரிக்கக் கூடாது எனத் தடுத்து ஊடகத்தினரையும் மிரட்டிய போலீஸார். தமிழ்நாடு எவ்வளவு மோசமானவர்கள் கைகளில் சிக்கி இருக்கிறது என்பதை வண்டலூர் சம்பவம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

**காவல்துறை மீது மாணவியின் உறவினர்கள் பரபரப்பு குற்றச்சாட்டு!**

பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்திடமிருந்து மொபைல் போன் உள்ளிட்டவற்றைப் பறிமுதல் செய்து மிரட்டுவதாகவும் உறவினர்கள் குற்றச்சாட்டு. "பாதிக்கப்பட்ட மாணவி, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவரைச் சந்திக்க போலீஸார் அனுமதி மறுக்கின்றனர்" - உறவினர்கள்.

**நாகர்கோவில் அருகே பூட்டிய வீட்டில் 118 சவரன் நகை கொள்ளை!**



நாகர்கோவில் அருகே யூடியூபர் தம்பதியின் வீட்டில் பின்பக்கத் கதவை உடைத்து 118 சவரன் நகை மற்றும் பணம் கொள்ளை. நாகர்கோவில் வி.ஐ.பி. கார்டனில் அமைந்துள்ள வினோத்குமார் - மதுமிதா தம்பதியின் வீட்டில் துணிகரக் கொள்ளை. மக்கள் அதிகமாக வசித்து வரும் பகுதியில் சுற்றிலும் கண்காணிப்பு கேமராக்கள் உள்ள இடத்தில் நடந்த இக்கொள்ளைச் சம்பவத்தால் பொதுமக்கள் அச்சம்.

**தருமபுரி அருகே பள்ளி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை!**

த.வெ.க. ஆட்சியில் கேள்விக்குறியாகும் பள்ளி மாணவிகளின் பாதுகாப்பு. தருமபுரி மாவட்டம் இண்டூர் அருகே அரசு நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை. பள்ளி மாணவிகளுக்கு ஆபாச குறுஞ்செய்திகள் அனுப்பி பாலியல் தொல்லை கொடுத்த புகாரில் அரசுப் பள்ளி ஆசிரியர் 'போக்சோ' சட்டத்தில் கைது. த.வெ.க. ஆட்சியில் பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு. த.வெ.க. ஆட்சியில் தங்களது பெண் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பவே பயமாக இருப்பதாக பெற்றோர் வேதனை.

**திருவள்ளூரில் பட்டா கத்தியுடன் பொதுமக்களை அச்சுறுத்திய நபர்கள்!**



திருவள்ளூரை அடுத்த கடம்பத்தூர் ஒன்றியம் - கண்ணூர் கிராமத்தைச் சேர்ந்த 4 இளைஞர்கள் கையில் கத்தியுடன் பொது மக்களுக்கு அச்சுறுத்தல். கண்ணூர் பேருந்து நிலையம் அருகே நின்று கொண்டு பொது மக்களிடம் தகாத வார்த்தைகளால் பேசியதோடு, கத்தியைக் காட்டி மிரட்டும் வகையில் வீடியோ எடுத்து இன்ஸ்டாகிராமில் பதிவு. அந்த வீடியோ வைரலானதை அடுத்து பொது மக்கள் கொடுத்த புகாரின் பேரில் மப்பேடு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை. போலீசார் விசாரணையில் விஷ்வா, தருண் ஆகிய 2 பேரை கைது செய்து சிறையில் அடைத்த நிலையில், விக்னேஷ் மற்றும் ஆகாஷ் இருவரையும் தேடி வருகின்றனர்.


**அச்சரப்பாக்கத்தில் பள்ளிவாசலில் வாக்குசேகரித்த த.வெ.க.வினர் விசில் அடித்ததால் பரபரப்பு!**

செங்கல்பட்டு மாவட்டம் - அச்சரப்பாக்கத்தில், பள்ளிவாசலில் வாக்குசேகரித்த த.வெ.க.வினர் விசில் அடித்ததால் பரபரப்பு. பள்ளிவாசலில் விசில் அடித்த த.வெ.க.வினரின் செயலால், முகம் சுளித்த பள்ளிவாசல் நிர்வாகத்தினர். சொல்லச் சொல்ல கேட்காமல் விசில் அடித்த த.வெ.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சியினரைக் கண்டித்த பள்ளிவாசல் நிர்வாகத்தினர்.

**திருவெறும்பூரில் கிராம சபைக் கூட்டத்தில் த.வெ.க. நிர்வாகிகள் அத்துமீறல்!**

திருவெறும்பூர் - வாழவந்தான் கோட்டை ஊராட்சியில் நடந்த கிராம சபைக் கூட்டத்தில் த.வெ.க.வினர் அத்துமீறல். மக்கள் பிரதிநிதிகள் இல்லாத த.வெ.க.வினர் கூட்டத்திற்கு வந்ததால், மனு அளிக்க வந்த பொதுமக்கள் அதிர்ச்சி. த.வெ.க. எம்.எல்.ஏ.வுடன் வந்த நிர்வாகிகளுக்கும், பொதுமக்களுக்கும் இடையே வாக்குவாதம், தள்ளுமுள்ளு. 'கிராம சபைக் கூட்டத்தில் உங்களுக்கு என்ன வேலை?' என பொதுமக்கள் ஆவேசம்.

**நெல்லை மாவட்டம் சீவலப்பேரி அருகே நடராஜன் என்பவர் வெட்டிப் படுகொலை!**



சீவலப்பேரி அருகே கட்டளை கிராமத்தைச் சேர்ந்த நடராஜன் (40). பன்றி வளர்ப்பு தொழில் செய்து வருகிறார். இவரது பன்றி அருகில் உள்ள கருப்பசாமி என்பவருக்கு சொந்தமான வைக்கப்போருக்குள் குட்டிபோட்டுள்ளது. இதனால் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. ஆத்திரத்தில் நடராஜனை வெட்டி கொலை செய்த கருப்பசாமி கைது. சீவலப்பேரி போலீசார் விசாரணை.